www.padippakam.com



# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....


## ஈழத்தவர் வரலாறு

19

இவ்விரு சங்கிலிகளுக்குமிடையில் ஒரு நூற்றாண்டு காலமும் ஐந்து அரசர்களும் இருந்துள்ளனர். சங்கிலி தனக்கு முன் அரசுரிமை கொண்டிருந்த சிங்கவாகு, பண்டாரம் இருவரையும் சூழ்ச்சியால் கொன்றான். பரநிருபசிங்கள் கண்டி சென்றிருந்தமையால் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது தந்தையையும் புறக்கணித்து விட்டு கி.பி. 1517 ல் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரியாசனையில் ஏறினான். மன்னன் பரராசேகரனையும் சங்கிலியே கொன்று செகராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான் என போர்த்துக்கேய ஆதாரங்கள் கூறும். பரநிருபசிங்கன், சங்கிலியின் வலிமைக்கு அஞ்சிச் சிலகாலம் பேசாதிருந்தான். கி.பி.1519 ஆம் ஆண்டளவில் சங்கிலி யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன்ாகினான். தமிழ் மக்களிடையே மிக நினைவு கொள்ளப்படும் மாமன்னாக சங்கிலி விளங்கி வருகிறான். பரராசசேகரின் பட்டத்து ராணியில்லாத ஒருத்திக்கு மகனாகப் பிறந்த சங்கிலி, தனக்கேற்பட்ட 'வைப்பாட்டி மகன் என்ற வசையை நீக்க , தன் மூத்த சகோதரர்களை (பட்டத்து ராணியின் பிள்ளைகளை) அழித்து யாழ்ப்பாண இராச்சியத்தின் சிம்மாசனத்திலேறினான். எனினும் இறுதிவரை யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேய அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ்ச் செல்லவிடாது போராடிய சுதந்திர வீரனாகக் கருதப்படுகிறான். போர்த்துக்கேய நூல்கள் சங்கிலியனைப் பற்றிக் கடுமையாகக் குறிப்பிடுவதற்குச் சில காரணங்கள் இருந்தன. கொடியவன், கொலைகாரன், கொடுங்கோலன் எனக் குற்றம் சாட்டுகின்றன. சங்கிலி ஆரம்பத்திலிருந்தே போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவனாகவும் அவர்களுடன் தொடர்பு கொண்டோரைத் தண்டிப்பவனாகவும் இருந்தான். உண்மையில் சங்கிலி ஓர் ஆளுமை மிக்க மன்னனாகவும் நாட்டுணர்வு மிக்க தலைவனாகவும் தீர்க்கதரிசனமும் கடும்போக்கும் கொண்ட ஓர் ஆட்சியாளனாகவும் நடந்து கொண்டான் எனத் தெரிகின்றது. போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டே கோட்டை இராசதானிக்கு வந்திருந்தபோதிலும் அவர்கள் யாழ்ப்பாணத்துடனான தொடர்பை 1543 ஆம் ஆண்டிலேயே கொள்ள முடிந்தமைக்கு சங்கிலி மன்னனின் எதிர்ப்பே காரணம்ாகும்.

### மன்னார்ப் படுகொலைகள்

தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரச் சந்தர்ப்பம் பார்த்திருந்தனர். கி.பி.1452 ஆம் ஆண்டு பிரான்சிஸ் சவேரியார் என்ற போர்த்துக்கேய மதகுரு மன்னாருக்கு வந்து, 600 பேரைக் கிறிஸ்தவர்க்ளாக மத மாற்ற்ம் செய்தார். அதனைக் கேள்வியுற்ற சங்கிலி மன்னன் படையுடன் மன்னார் சென்று மதம் மாறிய மக்களையும் மதம் மாற்றிய குருவையும் சிரச்சேதம் செய்வித்தான். அத்துடன் யாழ்ப்பாணத்திற் பல கலகங்களுக்கும் காரணமாயிருந்த பௌத்த சிங்களவரையுமகற்ற வேண்டிக் குறித்த தவணைக்குள்ளே தனது இராச்சிய எல்லைக்கப்பாற் செல்லுமாறு கட்டளை செய்து, அவர்கள் பள்ளிகளையும் இடித்துத் தள்ளினான். அநேக சிங்கள குடிகள் வன்னிப் பிரதேசத்திற்கும் கண்டி நாட்டிற்கும் சென்றார்கள். மன்னாரில் மதம் மாறியவர்களையும் மதப்பிரசாரம் செய்த் குருவையும் மன்னாரின் அரசியல் நிர்வாகியாகவிருந்த இளஞ்சிங்கம் என்பவனையும் சங்கிலி கொன்றமை மதம் பற்றியதன்று. அரசியல் பற்றியதே எனச் சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். மதம் மாறியவர்கள் போர்த்துக்கேயரின் ஊடுருவல்களுக்கு வழி செய்வார்கள் என எண்ணியே சங்கிலி அவ்வாறு செய்தான்.




சங்கிலியின் நடவடிக்கை ஆனது அரசியல் கண்ணோட்டத்திலும் சமகாலத்தில் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களையும் கருத்திற்கொண்டு பார்க்குமிடத்து முற்று முழுதாக நியாயமற்றது எனக் கூறமுடியாதுள்ளது. சங்கிலி மன்னன் எக்கட்டத்திலும் போர்த்துக்கேயரை யாழ்ப்பாண இராச்சியத்தில் நிலை கொள்ளாது தடுப்பதில் முழுக்கவனத்தோடு திட்டவட்டமான கொள்கையோடும் இருந்துள்ளான் என்பது அவனது செயல்களிலிருந்து புலனாகின்றது. 1545 ஆம் ஆண்டு சீதவாக்கை, கண்டி அரசர்களுடன் இணைந்து போர்த்துக்கேயருக்கு எதிராகக் கோட்டைக்குப் படையனுப்பிச் செயற்பட்டான். அதில் வெற்றி காண முடியவில்லை. 1552 இல் விதியபண்டார என்பவன் கோட்டை மன்னனுடனும் போர்த்துக்கேயருடனும் பகைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்தபோது அவனைச் சங்கிலி தன்னுடன் இணைத்துக் கொண்டான். வீரமாகாளியம்மன் கோயிலில் நிகழ்ந்த ஒரு கலவரத்தில் விதிய பண்டார இறக்க நேர்ந்தது.

### போர்த்துக்கேய படையெடுப்பு

மன்னாரில் நிகழ்ந்து முடிந்த துயரச் சம்பவத்திற்காகப் பழிவாங்கும் பொருட்டு கி.பி.1543 இல் போர்த்துக்கேயப் படை யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டது. இப்படைக்கு மாட்டின் அல்போன்சோதே சௌசா என்பவன் படைத்தலைவனாக வந்தான். அவனது கப்பல்கள் நெடுந்தீவில் ஒதுங்கியபோது பரநிருபசிங்கன் அவனை நாடிச் சென்று உதவி கோரினான். சங்கிலி செகராசசேகரன் வழங்கிய திரவியத்தால் திருப்தியடைந்த மாட்டின் அல்போன்சோதே சௌசா படையுடன் திரும்பிச் செல்லஇ நேர்ந்தது. வக்கிரதுக்குறி பண்டாரம் எனப் போர்த்துக்கேயரால் அழைக்கப்பட்ட பரநிருபசிங்கன் , சங்கிலி மன்னனுக்குப் பயந்து கோவைக்கு ஓட நேர்ந்தது. அரசுரிமையைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பரநிருபசிங்கன் கத்தோலிக்க மதத்தையும் தழுவிக்கொண்டான். இருந்தும் யாழ்ப்பாண இராச்சியத்தின் சிம்மாசனத்தில் அமர அவனுக்கு இறுதிவரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இரண்டாம் முறை கி.பி. 1560 ஆம் ஆண்டு கொன்ஸ் தாந்தீனு தே பிறகன்சா என்னும் தளபதியின் தலைமையில் போர்த்துக்கேயப்படை 77 கப்பல்களுடன் கரையூரில் வந்து இறங்கியது. தமிழர்படை எவ்வளவு எதிர்த்தும் போர்த்துக்கேயப்டை நல்லூாரை நோக்கி முன்னேறுவதைத் தடுக்கமுடியவில்லை. நல்லூார் நகரி முழுவதும் பறங்கிப்படைகளால் சூறையாடப்பட்டது. இளவரசனின் மனைவியும் அரண்மனைப் பெண்களும் போர்த்துக்கேயரினால் கைது செய்யப்பட்டனர். சங்கிலி மன்னன் கோப்பாய்க்குத் தப்பி ஓடி அங்கிருந்த காவல் அரணை அடைந்தான். போர்த்தக்கேயத் தளபதி பிறகன்சா சங்கிலி மன்னனைப் பிடிக்கும் நோக்குடன் கோப்பாய்க்குச் சென்றபோது சங்கிலி மன்னன்பச்சிலைப்பள்ளிக்குச் சென்றான். போர்த்துக்கேயப்படை தொடர்ந்து போரிட முடியாத நிலையில் சங்கிலி மன்னனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்தது. அந்த ஒப்பந்தப்படி சங்கிலி போர்த்துக்கேயருக்குத் திறையாக ஆண்டு தோறும் 12 கொம்பன் யானைகளையும் 1200 பதக்குப் பணமும் தர ஒப்புக்கொண்டான். அத்துடன் மன்னார்த்திலை போர்த்துக்கேயரிடம் விட்டுக்கொடுக்கவும் ஒப்புக்கொண்டான். இந்த ஒப்பந்தப்படி சங்கிலி மன்னன் திறை செலுத்தியதாகத் தெரியவில்லை. பிறகன்ஸா மன்னாரைக் கைப்பற்றி அங்கு ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டான். திருக்கேதீஸ்வரம் இடிக்கப்பட்டு அதன் கற்களும் இக்கோட்டையமைக்கப் பயன்படுத்தப்பட்டன. மன்னாரில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவது இலகுவாகியது. மன்னாரில் முத்துக்குளிக்கும் பகுதிகள் பறங்கிகள் வசமாகின. முதலாம் சங்கிலி 1565 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான் எனக் கொள்ளலாம். 1564 ஆம் ஆண்டு சீதவாக்கை மன்னன் மாயாதுன்னைக்கு ஆதரவாகவும் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் வடக்கர் படையொன்றினைச் சங்கிலியனுப்பியிருந்தான். எவ்வாறாயினும் போர்த்துக்கேயரிடம் இறுதிவரை சங்கிலி போராடியுள்ளான். அவனை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. சங்கிலி செகராசசேகரனுக்குப் பின் புவிராசபண்டாரம், காசிநயினார் அல்லது குஞ்சு நயினார் (1565), பெரியபிள்ளை

(31ம் பக்கம் பார்க்க)

-செங்கை ஆழியான்-

படிப்பகம்